**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 15/2026**
**இன்**
**அசல் வழக்கு எண். 118/2018**

1.இருளாயி
2.நல்லதம்பி
3.மலைராஜ்
4.தனசேகரன் ..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**/ எதிர் /**

எஸ்.சிவராமன்
(மேற்படியாரின் பவர் ஏஜெண்ட்
கண்ணன் என்பவர் மூலமாக) ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பு 02.02.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாராா்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் CPC Order 18 Rule 17 மற்றும் பிரிவு 151 ன் படி தனது தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டியிருப்பதால் DW1 ஆக விசாரிக்கப்பட்ட தன்னை மீண்டும் விசாரிக்க Re-call செய்து ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய சில முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் சான்றிட்ட நகல்கள் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள்

மூலம் தங்களது தரப்பு வாதத்தை நிரூபிக்க இயலும் என்றும், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்களாக இருப்பதால் தனது தரப்பில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய வேண்டியிருப்பதால், **DW1** ஆக விசாரிக்கப்பட்டுள்ள தன்னை மீண்டும் அழைத்து (**Re-call**) விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்ய ஏதுவாக தாவா மனுவை அனுமதியளித்திட வேண்டும் என்று மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிருரையின் சுருக்கம்:-**

தாவா வழக்கில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலேயே மேற்படி ஆவணங்கள் பற்றிய விபரங்களை கூறியுள்ள நிலையில், மனுதாரர்கள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் காலத்திலேயே மேற்படி ஆவணங்களை வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கில் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே தாவா மனுவை தனது தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாராா்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இருதரப்பு வாதங்கள் கேட்டு முடிவு செய்ய வேண்டும் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.03 17:17:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

<u>**எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.03 17:17:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No.15/2026**

**in**

**OS.No.118/2018**

**<u>Order</u>**

**Dated 03.02.2026**